## 05-01-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

### தலைப்பு : சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் - மீள்பார்வையும் புதிய ஆண்டும்

*செய்தி மடல் தொடர்பான மீள்பார்வை : ராஜரட்ணம்*

19/05/11 செய்திமடலில் கற்கைவட்டத்தை மேலும் வினைத்திறன் உடையதாக மாற்றுவதற்காக நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் 14 அம்சங்கள் கலந்துரையாடப்பட்டன. அவற்றுள் பின்வருவன சரியாக அமுல்படுத்தப்படவில்லை.

- முன்னதாகவே தலைப்பு தெரிவு செய்து அறிவித்தல்.

- கூட்டம் குறிபிட்ட நேரத்துக்கு ஆரம்பிக்கப்படாமை.

- பேச்சாளர்கள் நீண்ட நேரம் பேசுவது.

**பின்வரும் விடயங்கள் செய்திமடலில் நன்றாக உள்ளன.**

- மனித, சமூக, விஞ்ஞான, தொழில்நுட்ப, பண்பாட்டு, தத்துவ வளர்ச்சிக்கு உதவிய அறிஞர்கள், நிகழ்வுகள் சம்பவங்கள் தொடர்பான அறிமுகத்தை செய்திமடல் வெளியிடுவது.

- சிந்தனைக்குரிய கார்ட்டூன் சித்திரங்கள் வெளியிடுவது

- கவிதைகள்

- வலை எனும் பகுதியில் பல பயன்தரும் இணையக் கட்டுரைகளின் இலகு முகவரிகளைத் தருவது.

**கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்டவை :**

கூட்டம் பற்றிய தகவல் Facebook தவிர மற்ற ஊடகங்களையும் பயன்படுத்துவது. ( மின்னஞ்சல், குறுந்தகவல், பத்திரிக்கை)

கூட்டத்தின் தேவை கருதி பங்குபற்றுவோர் விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் ஒன்றை உருவாக்குதல் (இதை தனுஜன், அனோஜன் பொறுப்பேற்றார்கள்)

ஆய்வரங்கு ஒன்றை ஏற்பாடு செய்தல்.

பாடிப்பறைக்கு தனியான தொகுப்பு வெளியிடல்

வட்டத்தைப் பற்றியும், எவ்வாறு கலந்துரையாடல்களை ஒழுங்குடுத்தி நடத்துகிறோம் என்பது பற்றியும், நாம் பெற்ற பட்டறிவினையும் தொகுத்து மற்றவர்களும் இவ்வாறான கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்துவதற்கு உதவும் வண்ணம் ஆவணம் ஒன்றினைத் தயாரித்தல்

மாதத்தில் ஒரு தடவை திரைப்படக் காட்சி ஒன்றை நடத்துதல்.

கலந்துரையாடலுக்கு தெரிவுசெய்த பேச்சாளர் வராதவிடத்து தேவையான மேலதிக தலைப்புக்கள் வைத்திருத்தல்.

நூல் அறிமுகங்களை செய்திமடலில் கொண்டுவருதல்.

சமூக மத்தியில் வேலை செய்தல்

பயில்நிலம் சஞ்சிகை மூலம் பாடசாலைகளில் வேலைகள் செய்தல்.

செய்தி மடலில் வெளியாகும் கட்டுரைகளை உடனுக்குடன் இணையத்தளங்களூடாகப் பிரசுரித்தல்.

நூல் வெளியீடுகளையும் பிரசுரங்களையும் செய்யத்தொடங்குதல் .

ஏனைய சமூக அக்கறை கொண்ட அமைப்புக்களோடு சேர்ந்து வேலை செய்தல்

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**விஞ்ஞானத்தின் வரலாறு**
19-01-2012 | ராஜரட்ணம்

**இலங்கையில் பொதுக் கல்விக்கான புதிய சட்டங்கள்**
26-01-2012 | மார்க்ஸ் பிரபாகர்



**விவேகானந்தர்**

விவேகானந்தர் ( Vivekananda, ஜனவரி 12, 1863 - ஜூலை 4 1902) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த சமயத் தலைவர்களுள் ஒருவராவார். இவரது இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா (Narendranath Dutta). இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர். இவர் இந்தியாவிலும் மேலைநாடுகளிலும் அத்வைத வேதாந்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். 1893 ஆம் ஆண்டு அவர் சிகாகோவில் உலகச் சமயங்களின் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் உலகப்புகழ் பெற்றன.

**"பவுத்தப் புரட்சி இல்லாமல் செல்வாக்கு மிகுந்த மேல் ஜாதியினரின் கொடுங்கோன்மையிலிருந்து அவதிக்குள்ளாயிருக்கும் லட்சக் கணக்கான கீழ்ஜாதி மக்களுக்கு வேறு எது விடுதலை அளித்திருக்கும்?"**

**"கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்".**

- விவேகானந்தர்

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## ஸ்கன்டிநேவிய, ஜெர்மானிய அரசியல் பொருளாதார மாதிரிகள்

(இந்த வாரம் இடம்பெறவுள்ள உரையாடலுக்கான முன்வரைவு.
:நியூட்டன்

1 . முதலாளித்துவ/ தொழில் புரட்சி / பாராளுமன்ற அல்லது சிவில் அரசுகளில் தோற்றம்

2 . ஐரோப்பிய தொளிலாளர் போராட்ட வரலாறு

a . ரஷிய புரட்சி . ஜேர்மன் தொளில்லாளர் எழுர்ச்சி .சர்வதேச தொளில்லாளர் / சோஷலிச அணியின் பிளவு . முதலாம் உலக யுத்தம்

3 . இரண்டாம் உலக யுத்தத்தில் பின்னான அரசியல் சூழ்நிலை / இடதுசாரிகளின் வலது அரசியலுடனான கூட்டு அரசுகள்

4 .Center / அல்லது அரசியல் மத்திய நிலையில் உள்ள கட்சிகளின் பின்னணியும் அவைகளின் சித்தாந்த பாரம்பரியமும்

5 . உழைப்பும் - மூலதனமும் - தேசிய பொருளாதாரம் - முரண்பாட்டில் இருந்து அனுசரணை அரசியலை நோக்கி .

சமூக ஜனநாயக கட்சிகள் - மார்க்சிசம் VS சமூக - தாராளவாத சிந்தனை -

6 . சமூகநல அரசுகள் - ஸ்கெண்டிநேவியன் மாதிரி

7. இன்றுள்ள நிலை : தாராளவாதம், உலக மயமாதல் , சமூகநல அரச மாதிரிகளின் நிலை .

8. ஸ்கண்டிநேவிய மற்றும் யேர்மனி அரசியல் மாதிரிகள் இன்றுள்ள உலக நிலைக்கு உகந்தனவா ?

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

## வலை

### பாடிப்பறை நிகழ்ச்சி வலைபரப்பின் பதிவுசெய்யப்பட்ட வீடியோ

கடந்த 8-01-2012 நடந்த பாடிப்பறை நிகழ்ச்சி முழுமையாக வலைபரப்புச் செய்யப்பட்டது. அதன்போது பதிவு செய்யப்பட்ட முழுமையான வலைபரப்பின் வீடியோப்பதிவினை இந்த முகவரியில் நீங்கள் காணலாம்.

இலகு முகவரி : **valai.thulaa.net/58**

http://www.livestream.com/padipparai

### Richard Stallman Was Right All Along

*Up until relatively recently, it's been easy to dismiss Richard Stallman as a paranoid fanatic, someone who lost touch with reality long ago.*

இலகு முகவரி : **valai.thulaa.net/59**

http://www.osnews.com/story/25469/Richard_Stallman_Was_Right_All_Along

### Priority is to solve internal crisis, says Jagoda

*Jagoda was one of the prominent JVPers in the 'dissident' or the 'rebel' group which left the party. With the JVP's sudden decision to hold a special convention on January 01, Pubudu Jagoda spoke to The Nation expressing his views over the JVP's action and their future plans.*

இலகு முகவரி : **valai.thulaa.net/60**

http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article&id=10256%3Apriority-is-to-solve-internal-crisis-says-jagoda&catid=150%3Alead-news&Itemid=113

### 71 பேர் கையெழுத்திட்ட 'வேண்டுகோளின்' பின்னான அரசியல் பின்னணி

அண்மையில் 71 தமிழ் புத்திஜீவிகள் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்று தமிழ் அரசியல் தலைமைகளை நோக்கி வெளியிடப்பட்டதாக பீபீசி செய்தி அறிவித்தது. வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பாக தமிழ்த்தலைமைகள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதே அந்த அறிக்கையின் பொழிப்பு. அவ்வறிக்கையின் பின்னணி அரசியல்களை விமர்சிக்கிறது இக்கட்டுரை.

இலகு முகவரி : **valai.thulaa.net/61**

http://tamilcircle.net/index.php?option=com_content&view=article&id=8233%3A2012-01-07-134234&catid=343%3A2011

